## நகரங்களின் தூய்மை பற்றி கணக்கெடுப்பு

# 1ம் நட்சத்திர அந்தஸ்து பிரிவில் பங்கேற்கும் உழவர்கரை நகராட்சி

**புதுச்சேரி, நவ. 28:** உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:மத்திய அரசு, ஒவ்வொரு ஆண்டும் நகரங்களின் தூய்மை பற்றிய கணக்கெடுப்பு 'ஸ்வச் சர்வேஷன்' என்ற தலைப்பில் செய்து வருகிறது. குப்பைகளை அற்ற நகராட்சிக்கு நட்சத்திர அந்தஸ்து 1, 3, 5, 7 என்ற வரிசையில் வழங்கப்பட்டு வருகிறது.

நமது நகராட்சி 1ம் நட்சத்திர அந்தஸ்திற்கு மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி பங்குகொள்ள தேவையான அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளது.

இதன் வழிகாட்டுதலின் தொகுப்பு நகராட்சி இணையதளத்தில் http//oulmun.in/whatsnew.php என்ற இணைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

உழவர்கரை நகராட்சி 1ம் நட்சத்திர அந்தஸ்து பிரிவில் பங்கு கொள்ள உள்ளதால் உழவர்கரை நகராட்சி பகுதி பொதுமக்களுக்கு இதில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 15 நாட்களுக்குள் உழவர்கரை நகராட்சிக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.